Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 01 January-March 2024

# ஆபிரஹாம் ஹேரால்ட் மாஸ்லோவின் தேவைச் சார் வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் இரட்டைக் காப்பியத் தலைமையை இனங்காணுதல்

**ரா.வி.ஜீவநாத்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்மொழிமற்றும்மொழிபெயர்ப்பியல்துறை
திராவிடப் பல்கலைக்கழகம்
குப்பம் - 517 426
ஆந்திரப் பிரதேசம்
**முனைவர். க.மாரியப்பன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்மொழிமற்றும்மொழிபெயர்ப்பியல்துறை
திராவிடப் பல்கலைக்கழகம்,
குப்பம் - 517 426

மனிதர்கள் தாம் தோன்றிய காலம் முதல் தற்காலம் வரை பல்வேறு படிநிலைகளைக் கடந்து வந்துள்ளனர். முதலில் வேட்டையாடிப் பச்சைமாமிசம் தின்றிருந்தவர்கள் உண்பதில் தமக்கிருந்த கடினத்தைத் தாம் கண்டறிந்த நெருப்பிலிருந்து தமக்குத் தேவையான சுவையில் சமைத்து உண்ணத் தொடங்கினர். அதில் துவங்கியது அவர்களின் வளர்ச்சிக்கானப் பயணம். பருவநிலை மாற்றதிற்கு ஏற்ப தம்மையும் தம் உடைமைகளைத் தற்காத்துக் கொள்ளவும் தாம் இருக்கும் நிலத்திற்கு ஏற்ப தமக்குப் பாதுகாப்பான இருப்பிடத்தினை அமைத்துக் கொண்டனர். அப்போதே உடைமைச் சமுதாயமும் உருவாகிற்று. இதனைத் தொடர்ந்து தமது மகிழ்ச்சி மற்றும் துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளத் தமக்கான துணை, நட்பு, சுற்றம் மற்றும் நலன் விரும்பிகள் என அமைத்துக் கொண்டனர். பின் சுயத்தை நோக்கிய மனித மனம் அவர்களிடமிருந்து தம்மைத் தனித்துவப்படுத்த எண்ணி வலிமைமிக்கவனாக, ஆளுமைத் திறம் அல்லது தலைமைத்துவப் பண்பு மிக்கவனாகத் தம்மைக் காட்டிக் கொண்டனர். இவ்வாறு பல்வேறு வகைகளில் தனித்துவத்தை அடைந்து அதன் மூலம் தன் மீதான தன்மதிப்பீட்டையும், தன் மீதான பிறர் மதிப்பீட்டையும் வளர்த்துக் கொண்டனர். இவ்வாறு தாம் கடந்து வந்த பாதைகளின் வழி ஏற்பட்ட அனுபவங்கள், அதன் காரணமாகப் பெற்றபட்ட விரக்தி, ஏமாற்றம் மற்றும் சோர்வில் இருந்து விடுப்பட எண்ணினர். அதற்குத் தன்னை உணர்தல் அல்லது தன்மெய்ம்மையாக்கம் ஒன்றே வழி எனக் கண்டனர். இதன் காரணமாக முதலில் தன் நிறைவடைதல் போன்ற அனைத்து நிலைகளையும் கடந்து முக்தி என்பதே ஆன்மாக் கடைத்தேற்றத்தின் உயரிய நிலை என்றும் இதனையே வாழ்க்கைப் பயணத்தின் இறுதி நிலையாகக் கருதினர். மேலும் இவற்றைத் தற்காலத்திலும் நம்மால் உய்த்துணர முடிகிறது. இது போன்று காலந்தோறும் ஏற்பட்ட உளவியல் மாற்றங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்துத் தனிமனித வாழ்வின் தேவைசார் வளர்ச்சிப் படிநிலைகள் (Hierarchy of Needs) என்ற கோட்பாட்டை அமெரிக்காவைச் சேர்ந்த மனிதநேய உளவியலாளர் ஆபிரஹாம் ஹேரால்ட் மாஸ்லோ (Abraham Harold Maslow) 1902-1970 கண்டுபிடித்தார். அவை முறையே,

1. உடலியல் தேவைகள் (Physiological needs)
2. தற்காப்புத் தேவைகள் (Safety needs)
3. சுற்றம் மற்றும் அன்புசார் தேவைகள் (Belongingness and Love Needs)
4. தன்மதிப்பு உருவாக்கத் தேவைகள் (Esteem Needs)
5. தன்னை உணர்தல் (தன்மெய்ம்மையாக்கம்) குறித்த தேவைகள் (Needs for Self Actualization)

இந்தக் கோட்பாட்டை மையமாகக் கொண்டு, தனிமனிதனை அல்லது தன்னிகரற்றத் தலைமையை மையமிட்டுப் புனையப்பட்ட பொருள் தொடர்நிலைச் செய்யுளான காப்பிய இலக்கிய வகைமையில் தமிழில் தோன்றிய இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் காப்பியத் தலைமையை இனங்காணும் முயற்சியை மையமிட்டு இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

இலக்கியங்களின் வழி மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சியின் வரலாற்றை நம்மால் காணமுடியும். அதன் அடிப்படையில் இனக்குழுச் சமூகத்தின் வீழ்ச்சியில் இருந்து உடைமைச் சமுதாயத்தின் தொடக்க நிலையின் இணைவில் தொகை நிலை இலக்கிய வகைமையான சங்க இலக்கியத்தில் புறம் சார்ந்த பாடல்களில் தலைமைத்துவப் பண்பினை வாழ்த்துதல், கொடைத் திறத்தினைச் சிறப்பித்தல் போன்ற நிலைகளிலும் அகப்பாடல்களாகத் திணைச் சார்ந்த வாழ்வியலின் வழி தலைவன் தலைவியிடையே மட்டும் நிகழ்கின்ற களவு, கற்பு வாழ்க்கை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. உடைமைச் சமுதாயத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சியில் அதிகாரத்தின் குரலாக அறன் வலியுறுத்தும் நோக்கில் அற இலக்கியங்கள் தோன்றின. தனிமனித வாழ்வை மையமிட்டு இலக்கிய வகைமை அமைக்கும் காப்பிய வகைமை உருவாகிற்று. இது தன்னிகரற்ற தலைமையின் பிறப்பு, கல்வி, காதல், இணைவு, போர் இவற்றின் காரணமாக வெளிப்படும் மறம், வெற்றி, மனதின்கண் தோன்றும் நிலையாமை, துறவு, இறுதியில் முக்தி எனப் பொருள்தொடர்நிலை செய்யுளில் நூலின் பயனாக அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிபொருட்கள் முழுமைப் பெறின் பெருங்காப்பியம் என்றும் அதில் ஏதேனும் ஒன்று விடுபடிணும் சிறுகாப்பியத்திற்குள் அடங்கும் என்று வடமொழி தழுவல் அணி இலக்கண நூலான தண்டியலங்காரம் காப்பியத்துக்கு இலக்கணம் வகுக்கின்றது. இந்த இலக்கிய வகைமையைப் பெரும்பாலானோர் தமிழ் இலக்கிய மரபன்று என்று மறுக்கின்றனர். ஆனால் அவ்விலக்கணத்தோடு முழுமையும் ஒத்து இயற்றப் பெற்றப் பெரும்பான்மையும் தழுவல்களே, பெருங்கதையில் தொடங்கிச் சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, சூளாமணி முதலிய ஐஞ்சிறுங்காப்பியங்கள் காப்பியத்தலைமையைப் பெரும்பாலும் ஆபிரஹாம் ஹேரால்ட் மாஸ்லோ (Abraham Harold Maslow) வின் தேவைசார் வளர்ச்சிப் படிநிலைகள் (Hierarchy of Needs) கோட்பாட்டில் தன்னை உணர்தல் (தன்மெய்ம்மையாக்கம்) பெற்றவர்களாகப் பொருத்திப் பார்க்கமுடிகிறது. எடுத்துக்காட்டாகச் சீவகசிந்தாமணியில் சீவகன் பிறப்பில் இருந்து அவன் கந்துகடன், சுநந்தை, அச்சணந்தி மற்றும் காந்தருவதத்தை முதலானோர் மூலம் ஓரளவு உடலியல் தேவைகள் (Physiological needs) நிறைவேறியதைக் காணமுடிகிறது. இதனைத் தொடர்ந்து தற்காப்புத் தேவைகள் (Safety needs) மற்றும் சுற்றம் மற்றும் அன்புசார் தேவைகள் (Belongingness and Love Needs) இதற்குப் படைகளைத் திரட்டித் தயார்படுத்துதல் மற்றும் எண்மரை மணத்தல் இதன் மூலமாகத் தற்காப்பு மற்றும் அன்புசார் தேவைகள் இணைந்தே வெளிப்படுகிறது. பிறகு கட்டியங்காரனை வென்று நாட்டைத் திரும்பப் பெற்று அரசாட்சி புரிந்தமை முன்னைய மூன்றையும் முழுமையும் ஒருங்கே பெற்றதோடல்லாமல் தன்மதிப்பு உருவாக்கத் தேவைகள் (Esteem Needs) இணைந்தே பெறுதலை வாசிப்பில் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. இறுதியில் முத்தி இலம்பகத்தில் சீவகன் தோட்டத்தில் இருந்த பலாப்பழத்தைத் தின்ற மந்திகளிடம் இருந்து பிடுங்கி தோட்டகாரன் தின்றது போல் கட்டியங்காரனை வென்று தாம் நாட்டை ஆள ஒத்தது என்று ஞானம் தோன்றி தன்னை உணர்தல் (தன்மெய்ம்மையாக்கம்) அடையும் பொருட்டு இல்லறம் துறந்து துறவறம் பூண்டு முக்தியை நாடினான். இவ்வாறாகத் தன்னை உணர்தல் குறித்த தேவைகள் (Needs for Self Actualization) உடன் நிறைவுப் பெற்றவனாகக் காணப்படுகிறான். இவ்வாறு ஆண் தலைமாந்தராக இடம்பெறும் காப்பியங்களில் தேவைசார் வளர்ச்சிப் படிநிலைகள் எளிதில் பொருந்திவிடுகின்றன. மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி போன்ற பெண் தலைமாந்தராக இடம்பெறும் காப்பியங்களில் காமம் மற்றும் காதல் போன்ற உணர்வுகள் மட்டுப்படுத்திச் சமயத்துறவிகளாக உயர்வழிப்படுத்துகின்றனர் (Sublimation). பின் சமயவாதங்கள் செய்து தற்சமயத்தை முன்னிலைப் படுத்தி அதில் வென்றவர்களாகவும் காட்டப்படுகின்றனர். இறுதியில் முக்தி அடைந்தவர்களாகக் காட்டாமல் அதற்கான முயற்சியில் ஈடுபடுபவர்களாகவே அக்காப்பியங்கள் நிறைவடைகின்றன. இறுதியில் முக்தியைக் காட்டாதது சமயங்களின் அரசியல். அதன் காரணமாகச் சமயங்களின் பாலரசியலினுள் செல்லாமல் இந்த ஆய்வானது மாஸ்லோவின் தேவைசார் வளர்ச்சிப் படிநிலையை மட்டும் எடுத்துக் கொண்டு இக்கட்டுரையானது ஆய்ந்து அமைகிறது.

ஆபிரகாம் ஹேரால்ட் மாஸ்லோஸின் தேவைசார் வளர்ச்சிப் படிநிலைகள் (The Hierarchy of Needs) என்ற கோட்பாடு 1943ஆம் ஆண்டுச் சைக்காலஜிகல் ரிவியூ (psychological review) இதழில் மனித உந்துதல் கோட்பாடு (The Theory of Human Motivation) என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கட்டுரையில் முன்மொழியப்பட்ட

உளவியல் சிந்தனையாக அமைக்கின்றது. அதன் அடிப்படை தேவைச்சார் வளர்ச்சிப் படிநிலைகளை ஐந்து நிலைகளாக வகுக்கின்றார். அவை முறையே,

1. உடலியல் தேவைகள் (Physiological needs) - மனிதன் தான் வாழ்வதற்கு உயிரியலின் அடிப்படை தேவைகளான காற்று, உணவு, நீர், உறைவிடம், உடை, பாலியல் இச்சை, தூக்கம் இவை நிறைவடையாவிடின் மனித வாழ்க்கை உகந்ததாக அமையாது. மேலும் மாஸ்லோவின் இந்தப் படிநிலை ஏனைய படிநிலைகளை விட முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும் அடுத்தநிலைக்கு நகர அடிப்படையானது இந்த உடலியல் தேவைகள்.

2. தற்காப்புத் தேவைகள் (Safety needs) - தம் உடைமைகளின் மீதான பாதுகாப்பு, தற்காப்பு, ஒழுக்கவிதி, சட்டம், நிலைபேறு, பயத்தில் இருந்து விடுதலை

3. சுற்றம் மற்றும் அன்புசார் தேவைகள் (Belongingness and Love Needs) - உடலியல் மற்றும் தற்காப்புத் தேவைகள் நிறைவடைந்த பின், சமூகம் மற்றும் சுற்றத்தின் மீதான உணர்வு சார்ந்த பிணைப்பு நிலை. இது தனிமனிதனின் நடத்தை வெளிப்பாட்டினால் எழும் உறவுநிலை. இதில் நண்பர்கள், நெருக்கமானவர்கள், நம்பகமானவர்கள், தம்மை முழுவதுமாக ஏற்றுகொண்டவர்கள், தம்மீது அன்பைப் பகிர்ந்து கொள்பவர்கள், நலன் விரும்பிகள் எனத் தம்முடைய பிறப்பு முதல் ஒவ்வொரு நிலையிலும் இணையும் நபர்கள் என விரியும்.

4. தன்மதிப்பு உருவாக்க தேவைகள் (Esteem Needs) - மாஸ்லோ இதனை இரண்டாகப் பிரிக்கிறார் i) தன்மீதான தன்மதிப்பு - பெருந்தன்மை, சாதனை, நிபுணத்துவம், தற்சார்பு நிலை ii) தன்மீதான பிறர் மதிப்பீடு - பிறரால் தாம் புகழப்படுவது, அந்தஸ்து, தன்மானம் போன்ற தன்மதிப்பு உருவாக்கம் குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கு முக்கியமானதாக மாஸ்லோ கருதுகிறார். மேலும் அறிவாற்றல் தேவை மற்றும் அழகியல் தேவை என்றும் விரியும்.

5. தன்னை உணர்தல் (தன்மெய்ம்மையாக்கம்) குறித்த தேவைகள் (Needs for Self Actualization) - தம் ஆற்றலை உணர்ந்துகொள்ளுதல், தன்நிறைவடைதல், தன்னை வளர்த்துக்கொள்ளுதல் மற்றும் உச்சநிலை அனுபவத்தை நாடுதல்

இந்த தேவைச்சார் வளர்ச்சிப் படிநிலைகளில் முதல் நான்கு நிலை தேவைகளை கீழ்நிலைக் அல்லது அடிப்படை நிலை தேவைகள் என்றும் ஐந்தாவது நிலையை மேல்நிலை அல்லது உயர்நிலைத் தேவை என்றும் கூறுவர். அடிப்படைநிலைத் தேவைகளை அடையாது உயர்நிலைத் தேவையை அடைய இயலாது. மேலும் ஒருபடிநிலை போதிய அளவு நிறைவு பெற்றாலும் ஏனைய படிநிலைகளைத் தொடரலாம். உயர்நிலைத் தேவை நிறைவடைதலில் ஆரோக்கியம், மகிழ்ச்சியுடன் மனித வாழ்வில் நிறைவை அளிக்கிறது .

இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை தலைமையை இனங்காணும் முயற்சியில் இரண்டிலும் பொதுவான முதன்மை மாந்தர்களை முதலில் எடுத்துக்கொள்வோம். அதன் அடிப்படையில் முதலில் கோவலனையும் கண்ணகியையும் இணைத்தே தேவைசார் வளர்ச்சிப் படிநிலை கோட்பாட்டின் அடிப்படையில் பொருத்திப் பார்க்க இயலும். இதன் அடிப்படையில் மங்கலவாழ்த்துப் பாடலில் தொடங்கும் அவர்களின் பயணம் “பெருநிலம் முழுது ஆளும் பெருஞ்செல்வன்” என்று கோவலனையும், “வறியவர்க்குப் பொருளை வாரி வழங்கும் செல்வச் செழிப்பு மிக்க மாநாய்கனின் மகள்” என்று கண்ணகியையும் புகழப்படுவதில் இருந்தே இருவருக்கும் அடிப்படைத் தேவைகள் ஆன உடலியல் மற்றும் தற்காப்புத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றுடன் தலைமைக்குடியில் பிறந்தவர்களாகக் காட்டுவதில் இருந்தும் பெரும் நிலம் ஆளும் திறத்துடன் இணைத்துக் கூறுவதில் இருந்தும் இவர்கள் தற்காப்புத் தேவைகள் ஆகியவற்றில் ஓரளவு நிறைவு பெற்றவர்களாகக் காட்டுகிறது. இதற்குச் சிறந்த சான்றாக அவர்களின் இணைவிழாவும் சேர்த்தே விவரிக்கின்றார் இளங்கோவடிகள் (மங்கல.பா: 23-39).

மேலும், நெடுநிலை மாடத்து இடைநிலை மாடத்தில் கண்ணகி மற்றும் கோவலனுக்கும் (மனை.கா: 13) கோவலனின் தாய் குடிவைத்ததுடன், அவர்கள் அறங்கள் செய்ய வழி வகைச் செய்தார். உடன் இருவரும் காமனும், இரதியும் போலச் சீற்றங்கொண்ட நாகங்களைப் போல ஒருவருடன் ஒருவர் பின்னி பிணைந்து இருந்தனர் (மனை.கா: 91-94) என்பதில் மனையறம் படுத்த காதை வழி கோவலன் கண்ணகியின் உடலியல் தேவை முழுமையடைவதை கோவலன் கண்ணகியிடம் வெளிபடுத்தும் உரையாடலின் வழி (மனையற.கா:28-80) நம்மால் காணமுடிகிறது. இதனைத் தொடர்ந்து சுற்றம் மற்றும் அன்புசார் தேவைகள் நோக்கிய கோவலன்,

**மாமலர் நெடுங்கண் மாதவி மாலை**
**கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு**
**மணமனை புக்கு மாதவி தன்னோ**
**டணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி**
**விடுத லறியா விடுப்பின னாயினன்**
**வடுநீங்கி சிறப்பிற்றன் மனையக மறந்தென்.**

**(அரங்கேற்ற.கா: 170 - 175)**

மாதவியை விலைக்கு வாங்குகிறான் பின் இருவரும் காதல் இணையக் காமத்தில் கலந்தவர்களாக ஊடியும் கூடியும் இருந்ததாக அந்தி மாலைச் சிறப்புச் செய் காதையில் (31-34) காட்டப்படுகின்றான். சித்தராபதியின் சூழ்ச்சியின் காரணமாகத் தன்பொருளனைத்தையும் இழக்கிறான். கோவலனின் இத்தகைய செயலால் கண்ணகியும் உடன் தன்பொருளனைத்தையும் இழந்து தன் கணவன் உடன் இல்லாமையை எண்ணி ஏங்கியவளாய் உறக்கத்தை இழந்தாள் (அந்தி மாலை.கா 48-57, 66-67). இது தொடக்கத்தில் தம் இருவரும் நிறைவு பெற்ற படிநிலைகள் கோவலனின் செயலால் வீழ்ச்சியையடைந்ததைக் காட்டுகிறது. மாதவியும் கோவலனும் மனதொத்துக் காதலித்தாலும் கோவலன் தன் தவறான புரிதலால் கானல்வரி காதையில் மாதவியிடம் இருந்து முழுவதும் விலகுகிறான். புறஞ்சேரியிறுத்த காதையில் மாதவியின் கடிதத்தைக் கௌசிகனிடம் இருந்து பெற்றதன் மூலம் தன் தவற்றை உணர்ந்தாலும் திரும்பி மாதவியிடம் சேர இயலாதவனாய் உள்ளான் (புறஞ்சேரி.கா: 47 - 101). இதன் காரணமாகக் கோவலனுக்குச் சுற்றம் மற்றும் அன்புசார் தேவைகளில் மாதவியுடன் முழுமையாக நிறைவடையவில்லை. ஆயினும் கோவலனுக்கு மாடலன் மறையோனின் நட்பு, கண்ணகிக்குத் தேவந்திகையின் நட்பு மேலும் இருவருக்கும் தம்மீது அன்பு பகிர்ந்தவராகக் கவுந்தியடிகள் இன்சொல் பகிர்தலும், நம்பகமானவர்களாக மாதரி மற்றும் அவள் மகள் ஐயை அடைக்கலம் கொடுத்து அன்பு காட்டுதல் என்ற நிலையில் நிறைவு பெற்றவர்களாகக் காட்டுகிறது. தன் மதிப்பு உருவாக்கத் தேவைகளில் கோவலன் முதலில் மாடலன் மறையோனால் கருணை மறவன் என்று புகழப்பட்டுகின்றான் (அடைக்கல.கா: 25 - 94) மேலும் முழுமையடைய அதனை நோக்கி நகர்கிறான் என்பதைக் கண்ணகி, அந்தணர் முதலியோர்க்கு உணவளித்தல் முதலாகிய அறங்களைச் செய்யப் பொருளீட்டும் பொருட்டு வணிகம் செய்யப் பொற்கொல்லனிடம் சிலம்பு விற்க சென்று இறுதியில் கொலைக்களப் படுகிறான் (கொலை.கா: 71 - 217). தொடக்கத்தில் தேவைசார் வளர்ச்சிப் படிநிலையில் உடலியல் மற்றும் தற்காப்புத் தேவைகளில் 90% நிறைவுற்றாலும் அன்புசார் தேவையின் பொருட்டு முதல் இரண்டு தேவைகளில் வீழ்ச்சி அடைந்து தன்மதிப்பு உருவாக்குத் தேவையின் பொருட்டு முன் நகரும் போது கொலைக்களப் படுகிறான். இதன் காரணமாகக் கோவலன் தன்னை உணர்தல் அடையாமல் வீழ்ச்சி அடைகின்றான்.

அடுத்ததாகத் தன்மதிப்பு உருவாக்கத் தேவைகளைக் கண்ணகியிடம் உட்படுத்தும் போது திருமகள் அழகும், தீதி இலா வடமீனின் திறம் இவள் திறம் (மங்கல.பா: 26-30) என்பதும் கொற்றவை ஏறிய சாலினி கண்ணகியைப் புகழ்ந்து கூறும் போது கண்ணகி நாணி புன்முறுவல் செய்தல் (வேட்டுவவரி: 44 - 53) மேலும் கண்ணகியைக் கவுந்தியடிகள் பாராட்டி மாதரியிடம் உரைத்தல் (அடைக்கல.கா: 131- 150) சீற்றத்துடன் வந்த கண்ணகியை வாயிற் காவலனின் புகழுரை (வழக்குரை.கா 35 - 42) கண்ணகியைக் குன்றக்குரவர்கள் புகழ்தல் (குன்றக்குரவை: 21 பாட்டுமடை) (வாழ்த்து கா: 1 - 29) காப்பியத்தின் இறுதியில் கண்ணகி தன்னை உணர்தலின் வழி தெய்வமாக்கப் படவில்லை என்பதனை கண்ணகி மணிமேகலையிடம் தாம் செய்த பாவச்செயல் எம்மை விடாது உன்னைப் போலவே நாங்களும் பல பிறவி எடுப்போம் என்று

மணிமேகலையில் இடம் பெறும் கூற்றோடு (வஞ்சிமாநகர்புக்க.கா: 34-67) கண்ணகியும் தன்னை உணர்தலை அடையாமல் வீழ்ச்சிக்குள்ளாகுகிறார். ஆனால் மதுராபுரி தெய்வத்தின் மூலம் முற்பிறப்பை உணர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தாள் என்பது மாஸ்லோசின் தன்னை உணர்தலின் வினைதிட்பமாகக் கொண்டாலும் மேல் குறிப்பிட்ட கண்ணகி மணிமேகலை உடனான உரையாடல் உச்சநிலை அடைந்ததற்கான வெளிப்பாடாக அமையாதது இங்குத் தன்னை உணர்தல் நிலையில் பின்னடைவாகவே கொள்ளமுடிகிறது.

மேலே கூறப்பட்ட கோவலன் கண்ணகி வாழ்வியல் காப்பியத்தின் திருப்புமுனை பகுதியான கானல்வரியின் போது மாதவி பாடிய பாடலில் தெளிவுற கோவலன் நேரடி விளக்கத்தைப் புரிந்திருந்திருந்து பிரிவு ஏற்படாமல் இருந்திருந்தால் காப்பியத்தின் போக்கு முழுவதும் மாற்றம் ஏற்பட்டிருக்கக் கூடும் அல்லது கோவலன் கொலைக்கள படாமல் இருந்திருப்பின் கோவலன், கண்ணகி இருவரும் தன்னை உணர்தல் அடைந்திருக்கக் கூடும். அந்நிலை அடையாமைக்கான காரணம் இளங்கோவடிகள் காப்பியத்திற்கான கருதுகோளான ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்ற தம் காப்பியப் போக்கினைச் சிதையாமல் இயற்றியுள்ளார். ஆனால் இவ்விரண்டிற்கும் ஊழ் அடிக்கருத்தாக அமைவதை காணமுடிகிறது. அதன் காரணமாகப் பிறப்பறுக்கும் நிலை ஏய்தினால் மட்டுமே முக்தி அடையலாம் என்று நோக்குடனே குறிப்பொருளாகச் சிலம்பில் இருந்து மணிமேகலை துறவு பற்றி மணிமேகலையின் இறுதி வரை அமைக்கின்றது.

மணிமேகலையைப் பாத்திரத்தை ஆராயும் போது சிலப்பதிகாரத்தில் மாடலன் மறையோன் மூலம் மாதவிக்கும் கோவலனுக்கும் பிறந்த மகளாகப் பெயர் சூட்டு விழாவில் அறிமுகப்படுத்தப்படுகிறாள் (அடைக்கல.கா: 22 - 43). அதைத் தொடர்ந்து வருவதுரைத்தல் போல் கோவலன் தான் தீக்கனா கண்டதாகவும் அதில் மாதவி தன் மகள் மணிமேகலை அறவோனிடம் ஒப்படைக்கப் படுவதாகவும் காட்டப்படுகிறாள்.

**அணிதிதழ் போதி அறவோன் தன்முன்**
**மணி மேகலை மாதவி அளிப்பவும்**
**நனவு போல நள்ளிருள் யாமத்துக்**
**கனவு கண்டேன் கடிதுஈங்கு உறும்என**

**(அடைக்கல.கா: 103-106).**

அதனைத் தொடர்ந்து வாழ்த்துக் காதையில் அடித்தோழியரற்றாக,

**காதலன் றன்வீவுங் காதலிநீ பட்டதூஉம்**
**ஏதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கிப்**
**போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த**
**மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ**
**மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ; (வாழ்த்து.கா:7)**

மணிமேகலை துறவு பூண்டது அறியமுடிகிறது. இதனைத் தொடர்ந்து இறுதி காதையான வரந்தரு காதையில் மணிமேகலை துறவை பற்றிச் சேரன் வினவ அதற்குத் தேவந்திகை விவரிப்பதாக அமைகின்றது (வரந்தரு.கா: 9 - 34) மணிமேகலை காப்பியத்தில் தேவைசார் வளர்ச்சிப் படிநிலை அடிப்படை தேவைகளாக உடலியல் தேவைகள் காணும் போது மாஸ்லோசும் சீத்தலைச்சாத்தனாரும் ஒன்றுபடுகின்றனர்.

**கறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியு முடையு முறையுளு மல்லது**
**கண்டது இல்**

**(ஆபுத்திரனோடு மணிபல்லவ மடைந்த.கா: 228 - 231)**

என்பதைக் கருத்தில் கொண்டு அமுதசுரபி மூலம் முதலில் வறியவர்களுக்குப் பசியைப் போக்குகின்றதையும், மேலும் பசிப்பிணியிலிருந்து விடுபட மணிமேகலைக்கு மணிமேகலா தெய்வம் மந்திரம் ஒன்றைக் கூறுகிறாள்.

**மக்கள் யாக்கை யுணவில் பிண்டம்**
**இப்பெரு மந்திர மிரும்பசி யறுக்குமென்**
**றாங்கது கொடுத்தாங் கந்தர மெழுந்து**
**நீங்கிய தாங்கு நெடுந்தெய்வந் தானென்.**

**(மந்திரங்கொடுத்த.கா: 90 - 94)**

இதனைத் தொடர்ந்து மணிமேகலையின் வழி தற்காப்புத் தேவைகளாகக் காணும்கால் இளமையான வளையல் அணிந்த பெண் என்று கூறி யாரும் விளைப் பொருள் உரைக்கவோ, மனந்திறந்து பேசவோ உரையாடவும் செய்யார் ஆகையால் வேற்று உரு ஏய்தவும், வான்வழி செல்லவும் மந்திரத்தை மணிமேகலா தெய்வம் தருகிறார் (மந்திரங்கொடுத்த.கா: 75 - 83) அதன் விளைவாகக் காயசண்டிகை வடிவம் பெற்று உதயகுமாரனிடம் இருந்து தப்புவது. இராசமாதேவியின் கட்டளையேற்றுத் தவறு செய்ய முயன்றவனிடம் இருந்து ஆண்மை உருப்பெற்றுத் தப்பித்தல்.

**ஆங்கவன் சென்றவ் வாயிழை யிருத்த**
**பாங்கில் ஒருசிறைப் பாடுசென் றணைதலும்**
**தேவி வஞ்சம் இதுவெனத் தெளிந்து**
**நாவியல் மந்திரம் நடுங்கா தோதி**
**ஆண்மைக் கோலத் தாயிழை யிருப்பக்**
**காணம் பெற்றோன் கடுந்துய ரெய்தி**

**(சிறைவிடு.கா: 43 - 54)**

சமயவாதிகளிடம் மாற்று வடிவத்துடன் சமயவாதம் செய்தல். மேலும் எப்போதெல்லாம் மணிமேகலை காப்பிய நோக்கத்தில் இருந்து இப்பொழுதெல்லாம் தடம்பிறழப் படுகிறாளோ அப்போதெல்லாம் மணிமேகலா தெய்வம், தீவதிலகை, கந்திற் பாவைப் போன்ற தெய்வங்களின் துணைக் கொண்டு மீளுகிறாள்(மந்திரங்கொடுத்த.கா: 6 - 93). தீவதிலகை அமுதசுரபி பெற வழிகாட்டுதல் (பாத்திரம்பெற்ற.கா: 35 - 60). உதயகுமரன் இறப்பினால் துயருற்று இருந்த மணிமேகலைக்குத் துயர் நீங்கும் பொருட்டும். காப்பியத்தில் அடுத்தடுத்து நிகழ்வதை வருவது உரைத்தலின் மூலம் மணிமேகலையைக் காத்தல் போன்ற செயல்களின் வழி கந்திற்பாவை உதவுதல் (கந்திற்பாவை வருவது உரைத்த.கா: 72 - 189) சுற்றம் மற்றும் அன்புசார் தேவைகளை அடைதலில், உதயகுமரன் மீதான காதலை முற்பிறப்பின் தொடர்ச்சியாகத் தொடர்ந்தாள் (மந்திரங்கொடுத்த.கா: 42 - 45). உதயகுமாரன் மணிமேகலை விலைமகள் என்பன போன்று பலவாறாக வசைமொழி கூறினாலும் அவன்பால் தன்நெஞ்சைப் பறி கொடுத்தாள் (மணிமேகலாதெய்வம் வந்து தோன்றிய. கா: 82 - 93). மேலும் உதயகுமாரனை நெறிபடுத்த எண்ணி அவன் மீது காதல் கொண்டிருந்தாலும் நிலையாமை போதிக்கிறாள். (உதயகுமரன் அம்பலம் புக்க.கா: 134 - 143) பிறப்பறுக்கும் பொருட்டு வேட்கை = துறவாக உயர்வழிபடுத்தும் (Sublimation) முயற்சியில் உதயகுமாரனைக் காஞ்சனன் வாளாலெறிந்த காதையில் இழக்கிறாள். அதன் காரணமாகத் துயர் கொண்டவளாக மணிமேகலை காட்டப்படுகிறாள் (கந்திற்பாவை வருவது உரைத்த.கா: 01 - 71)சுற்றம் மீதான அன்பாகச் சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக மாற்றியது காயசண்டிகை பசிப்பிணி போக்கியது எனப் பசியால் வாடிய உயிர்களுக்கு உணவளித்தலின் மூலம் காணமுடிகிறது. தன் மதிப்புருவாக்கம் தேவைகளில் தன்னை எதிர்த்தவர்களிடம் இருந்தே தன்மீதான தன்மதிப்பு உருவாகுவதைச் சிறைவிடு காதையின்கண் உதயகுமரனின் தாயான இராசமாதேவி தன் மகனின் இறப்பிற்குக் காரணமான மணிமேகலையைப் பலவாறாகத் துன்புறுத்தியும் அவப்பெயரை ஊர் முழுவதும் பரப்பினாலும் இறுதியில் மணிமேகலையைச் சித்ராபதியிடம் இருந்து காத்து மாதவரான அறவணருடன் அனுப்பி வைத்தல் (சிறைவிடு.கா: 35 - 147). இறுதியில் தன்னை உணர்தலின் பொருட்டுச் சமயக் கணக்கர்கள் தந்திறங் கேட்டு, வஞ்சிமாநகரில் மாசாத்துவானைச் சந்தித்து அவரோடு உரையாடி, அறவணடிகளிடம் தவத்திறம் தனக்கு அறிவிக்குமாறு வேண்டி பெற்று, பௌத்த சமயத்தின் நெறியில் பேதைமை முதலிய பன்னிரு நிதானங்களின் தோற்ற, ஒடுக்கம் முதலிய பிறவற்றையும் முறையே உபதேசம் பெற்று ஐயந்திரிபற உணர்ந்து பிறவித்துன்பம் ஒழிய என்று

அந்நகரிலேயே நோன்பு நோற்று பிறப்பறுக்கும் நெறியில் நின்றாள் என்று இறுதி காதையாகப் பவத்திறமறுகெனப் பாவைநோற்ற காதையில் நிறைவுறுகின்றது.

**இந்நால் வகையான் மனத்திரு ணீங்கென்று**
**முன்பின் மலையா மங்கல மொழியின்**
**ஞான தீப நன்கனக் காட்டத்**
**தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்**
**பவத்திற மறுகெனப் பாவைநோற் றனளென்.**
**(பவத்திறமறுகெனப் பாவைநோற்ற.கா 260 - 265)**

இதன்கண் மணிமேகலை பழம் பிறப்பு உணர்ந்தலில் இருந்து பிறப்பறுக்கும் நிலை வரை நோக்கியவளாக இயங்குகிறார். மாஸ்லோசின் வழி தன்னை உணர்தல் (தன்மெய்ம்மையாக்கம்) அடைபவர்களில் அல்லது அடைந்தவர்களின் பண்புகளாகச் சிலவற்றை கூறுகிறார். அவை

1. மெய்மையை உணரும் திறன்
2. தன்னைத் தான் முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல்
3. தன்னிச்சையான இயல்பு, எளிமை, இயல்பு தன்மை
4. சிக்கல்களைப் புறவயத்தில் அணுகுவது
5. உணர்ச்சி வயத்தில் இருந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்வது
6. புதுமையைப் பாராட்டல்
7. உச்சநிலை அனுபவத்தை அடைதல்
8. சமூகத்தின் மீதான அக்கறை
9. ஆழமான தனிமனித உறவுநிலை
10. படைப்பாகத்திறன்
11. பண்பாட்டு நிலையில் இணங்க மறுப்பது

மேற்குறிப்பிட்ட அனைத்தும் பொருந்தியவர்களே தன்னை உணர்ந்தவர்கள் என்பது பொருளல்ல. மாறாகத் தன்னை உணர்ந்தவர்களிடம் இதில் சில பண்புகள் பொருந்தி இருப்பதைக் காணமுடிகிறது. மேலும் இத்தகைய பண்புகள் பொருந்திய அனைவரும் தன்னை உணர்ந்தவர்களாகக் கருதவும் இயலாது என்று மாஸ்லோ குறிப்பிடுகின்றார். இதன் அடிப்படையில் மணிமேகலையின் சில பண்புகள் பொருந்தி வருவதை வாசிப்பின் வழி உய்த்துணர முடிகின்றது. மேலும் தன்னை உணர்தல் என்பது ஓர் ஆற்றல்வளத்தை (one potential) எடுத்துத் தன்னை முழுமையாக உட்படுத்தி அந்த ஆற்றல் வளத்தைச் செய்து முடிப்பதேயாம். அவ்வாறே மணிமேகலை “உயர் அறங்களை அறிந்து உலகுக்கு ஒளியாக நீ திகழ வேண்டும்” (மந்திரங்கொடுத்த.கா: 48 - 49) என்ற மணிமேகலா தெய்வத்தின் வாக்கினை ஏற்று அதனையே தம் குறிக்கோளாகக் கொண்டு அதில் வெற்றியும் பெறுகிறாள்.

மேலே கூறிய வண்ணம் இரட்டைக் காப்பியத்தில் இடம்பெறும் முதன்மை மாந்தர்களாகக் காணப்படும் கோவலன், கண்ணகி, மணிமேகலை இவர்கள் மூவரில் மாஸ்லோவின் தேவைசார் வளர்ச்சிப் படிநிலைகளின் வழி தன்னை உணர்தல் என்ற படிநிலையை அடைந்தவராக மணிமேகலையே காணப்படுகிறாள். இதன் அடிப்படையில் காணும்போது இரட்டைக் காப்பியத் தலைமை மணிமேகலையை மையமிட்டே அமைந்திருக்கக் கூடும் என நம்மால் உணரமுடிகிறது.

துணை நூற் பட்டியல்


| | | | |
|---|---|---|---|
| 1. | அய்யப்பன்.கா, | | மணிமேகலை - பன்நோக்கு வாசிப்பு<br>சீத்தலைச்சாத்தனார் பிரதியின் வாசிப்பு அரசியல்<br>காவ்யா 16, இரண்டாம் குறுக்குத் தெரு,<br>டிரஸ்ட்புரம்,கோடம்பாக்கம்,<br>சென்னை - 600 024.<br>முதல் பதிப்பு - 2015. |

ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024


| | | | |
|---|---|---|---|
| 2. | சாமிநாதையர்.உ.வே., பதிப்பாசிரியர் | | இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம்<br>மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 90.<br>பதினான்காம் பதிப்பு - 2021. |
| 3. | சாமிநாதையர்.உ.வே., பதிப்பாசிரியர் | | மணிமேகலை<br>மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்,<br>சென்னை - 90. ஒன்பதாம் பதிப்பு - 2013. |
| 4. | சீனிவாசன். ரா | | மணிமேகலை கதை<br>ராமையா பதிப்பகம்,<br>ஜி - 4, சாந்தி அடுக்ககம்,<br>3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,<br>ராயப்பேட்டை, சென்னை - 600 014. முதற் பதிப்பு - 2018 |
| 5. | தங்கமணி.கே.டி.கே., | | மணிமேகலை பற்றி<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,<br>41 – பி, சிட்கோ என்டஸ்டியல் எஸ்டேட்,<br>அம்பத்தூர், சென்னை - 600 098.<br>இரண்டாம் பதிப்பு - பிப்ரவரி 2015. |
| 6. | பஞ்சாங்கம்.க., | | இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம்<br>இன்றைய உரைநடைத் தமிழில்<br>அன்னம், மனை எண் 1, நிர்மலா நகர்,<br>தஞ்சாவூர் - 613 007.<br>முதல் பதிப்பு - ஜனவரி 2020. |
| 7. | பகவதி.கு., | | திறனாய்வு அணுகுமுறைகள்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி,<br>சென்னை - 600 113.<br>முதல் பதிப்பு - 1989, மறுபதிப்பு - 2007. |
| 8. | புலியூர் கேசிகன் உரை | | மணிமேகலை மூலமும் உரையும்<br>சாரதா பதிப்பகம்,<br>ஜி - 4, சாந்தி அடுக்ககம்,<br>3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,<br>ராயப்பேட்டை, சென்னை - 600 014.<br>நான்காம் பதிப்பு - 2016. |
| 9. | Duane P.Schultz<br>Sydney Ellen Schultz | | Theories Of Personality<br>University of South Florida<br>Cengage learning<br>20 channel center street<br>Bostan, MA 02210<br>USA<br>Eleventh Edition |
| 10 | https://www.simplypsychology.org/maslow.html | | |